
தமிழ்ச்சிட்
கரு
15
தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் - 1 | தி. பி. ௧௯௯௭. புரட்டாசி (செப்டம்பர்). | இசை - 2.

## மாணவர்கள் ஒழுங்கு!

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஒழுங்கு உயிர்நாடி போன்றது. நம் மக்களிடையில் இப்பொழுது ஒழுங்கு குறைந்து வருகின்றது. நாகரிகம், பண்பாடு இவற்றிற்கெல்லாம் அடிப்படை ஒழுங்குதான். ஒழுங்கு என்பது என்ன? ஒவ்வொருவரும் தாம் தாம் மேற்கொண்ட போக்கு பிறரின் சரியான போக்கிற்குத் தீங்கு தராமல் இருக்கும்படி நடந்துகொள்ளுவது.

'உன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றாயோ, அப்படியே நீ பிறரிடம் நடந்துகொள்ளுதல் வேண்டும்' என்றார் ஏசு கிறித்து.

இப்பொழுது மாணவர்களிடம் ஒழுக்கம் குறைந்து வருகின்றது. மக்கள் ஒருவர்க்கொருவர் பகைவர்களைப்போல் நடந்துகொள்ளு கின்றனர். ஒவ்வொருவரும் தம்தம் அருகில் இருப்பவர்களைப்பற்றிக்

பொறுப்பாசிரியர் :- பெருஞ்சித்திரன்.
உதவிப்பாசிரியர் :- இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர் - 1.

கவலைப்படாமல், அவரவர் நலங்கள்பற்றியே கருத்து செலுத்து கின்றனர். அரசினர் வேலைகளில் இருப்பவர்கள் தம்தம் பணிகளில் ஒழுங்காக இருப்பதில்லை. காசுக்காகத் தம் கடமைகளில் தவறு செய்துவருகின்றனர். அமைச்சர்களும் ஒழுங்காகத் தம்தம் கடமை களில் கருத்துச் செலுத்துவதில்லை. உலகிலுள்ள நாடுகளும் ஒன்றுக்கு ஒன்று துணையாக இருப்பதில்லை. இவையெல்லாம் உலக ஒற்றுமைக்குக் கேடு தருவனவாகும். இந்தத் தீய போக்கிலிருந்து உலகத்தைக் காப்பது எப்படி என்பதுபற்றியே, உலகில் உள்ள நல்லவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும்? நாம் ஒவ்வொரு வரும் நம்முடைய கடமைகளிலிருந்து ஒரு சிறிதும் பிசகாமல் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்களாயிருப்பவர் கல்வி கற்று முடியும்வரை, அறிவை வளர்த்துக் கொள்ளுவதிலும், கல்வியில் தேர்ச்சி பெறுவதிலுமே கருத்துச் செலுத்துதல் வேண்டும். தொழிலாளிகள் தங்கள் தங்கள் தொழில்களிலேயே கவனம் செலுத்தி அரும்பாடுபட்டுத் தொழில் வளர்ச்சியைப் பெருக்குதல் வேண்டும். இது நாட்டு வளர்ச்சிக்கு நல்லது.

நாம் சிறுவர்களாயிருக்கையில் ஒழுங்கைக் கடைப்பிடித்தால் தான், பெரியவர்களாக ஆகும்பொழுது நம் வாழ்க்கையும் செப்ப முற்று விளங்கும். நமக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர்களிடமும் பெரியோர்களிடமும் பெற்றோரிடமும் அன்பும் பணிவும் காட்டினால் தான், எதிர்காலத்தில் நம் நாட்டிலிலுள்ளவர்களிடமும் பிறநாடுகளில் உள்ளவர்களுடனும் அன்பும் இரக்கமும் கொண்டு வாழமுடியும்.

எல்லாரும் பிறந்துவிட்டோம். அன்புள்ளவர்களாகவும், அறி வுள்ளவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும், திறமையுள்ளவர்களாக வும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து புகழ்பெறுவதைவிட இவ்வுலகத்தில் வேறு பயன் என்ன இருக்கின்றது?

உற்ற கல்வியும் ஓங்கிய செல்வமும்
பெற்றவன் ஆயினும் பெரியோன் ஆயினும்
ஒழுங்கிலான் ஒருவனை விலங்கே என்க.

# உலகம் சுற்றுவோம்

## அயூப்கான் கொடுமைக்கு இலண்டனில் எதிர்ப்பு.

பாக்கிசுத்தான் தலைமையமைச்சர் தளபதி அயூப்கான் கொடுமைகளை எதிர்த்து, இலண்டனில், கிழக்கு பாக்கிசுத்தானியர் ஆர்ப்பாட்டம் செய்தனர். தங்களுக்குத் தனியாட்சி வேண்டும் என்பதும், அயூபின் கொடுங்கோலாட்சியை எதிர்க்கிறோம் என்பதும், சிறைப்படுத்தியிருக்கும் 1500 அரசியல் ஈடுபாட்டாளரை விடுதலை செய்ய வேண்டும் என்பதும் அவர்களின் கோரிக்கை. கொடுமையான ஒருவர் தலைமையை மக்கள் எதிர்க்கத்தானே செய்வர்.

*

## மாணவர் எப்படி ஆசிரியர்கள் அப்படி!

அலகாபாத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று இருக்கின்றது! அதிலுள்ள மாணவர்களில் 700 பேர் திடுமென கல்லூரிக்கு வராமல் நின்றுவிட்டனர். உடனே அங்குள்ள 44 ஆசிரியர்களும் என்ன செய்தனர் தெரியுமா? ''எங்களிடம் மாணவர்களுக்கு நம்பிக்கையுமில்லை; மாணவர்கள் எங்களை மதிப்பதும் இல்லை.'' என்று சொல்லி ஆசிரியர் வேலையிலிருந்து நீங்கிவிட்டனர். இவர்களோடு அங்குள்ள மற்ற 12 ஊழியர்களும்கூட 'வேலையிலிருக்க விருப்பமில்லை' என்று கூறி நின்றுகொண்டனர். இவற்றையெல்லாம் பார்த்த கல்லூரித் தலைவர் மட்டும் சும்மா இருப்பாரா? உடனே அவரும் 'நானும் வேலையிலிருந்து நீங்கிக்கொள்ளுகிறேன்' என்று தெரிவித்துவிட்டு நின்றுகொண்டார். கல்லூரி இழுத்துப் பூட்டப்பட்டுக் கிடக்கிறது.

*

## உலகப் பொதுமை மாநாடு!

இலண்டனில் இப்பொழுது உலகப் பொதுமை (காமன்வெல்த்) நாடுகளின் தலைமையமைச்சர் மாநாடு நடைபெறுகின்றது இருபத்து

மூன்று நாடுகளில் 13 நாடுகளின் தலைமையமைச்சர்கள்தாம் நேரடியாக வந்துள்ளனர். பிறநாடுகள் தங்களின் சார்பில் வேறு அமைச்சர்களை அனுப்பியுள்ளன. இதிலிருந்து உலகப் பொதுமைக் கொள்கையில் எல்லா நாடுகளும் அக்கறை காட்டவில்லை என்று தெரிகின்றது இல்லையா?

*

## கறுப்பர்களை வெறுத்த வெள்ளையர்!

தென் ஆப்பிரிக்கா தலைமையமைச்சர் என்டிரிக் வெர்வோர்டு – பாராளுமன்றத்திலேயே குத்திக் கொல்லப்பட்டார். இவர் ஆப்பிரிக்கக் கறுப்பர்களை வெறுத்து ஒதுக்கி வந்தார். அதனால் பெரும்பாலான உலக நாடுகள் இவர் ஆட்சியைக் கண்டித்தன. இவருக்கு 64 அகவை ஆகின்றது. 'எல்லாருக்கும் பிடிக்காத ஒரு கொள்கையை இவர் கொண்டிருந்ததைக் கண்டிக்கவே இவரைக் கொலை செய்தேன்' என்று இவரைக் கொன்றவன் கூறினனும்.

## பல்கலைக்கழக துணைவேந்தர்!

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த திரு. ஏ. இலக்குமணசாமி அவர்களே மீண்டும் அந்தப் பதவிக்கு அமர்த்தப் பெற்றிருக்கின்றார். கடந்த 24 ஆண்டுகளாக அவர் இந்தப் பதவியில் இருந்துவருகின்றார். இந்தப் பதவிக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆளுநர் (கவர்னர்) தகுந்த ஒருவரைத் தெர்ந்தெடுப்பார். இதுபோல் திரு. இலக்குமணசாமி அவர்கள் 9 முறை தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார். அவருக்கு 79 அகவை (வயது) ஆகின்றது.

## தூங்காத நகரம்!

உலகில் உள்ள நகரங்களில் தூங்காமல் எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்கும் பெரிய நகரம் நியூயார்க்கு நகரமே! இங்கு இரவென்பதே தெரிவதில்லையாம். இரவிலும் பகல் போலவே வெளிச்சம் இருக்குமாம். வண்டிகள் போய்க்கொண்டும் வந்துகொண்டுமே இருக்குமாம். மக்கள் நடமாட்டமும் கொஞ்சங்கூட குறையாதாம்.



# உங்கள் மடல்கள்

O தமிழ்ச்சிட்டு பறந்து வந்தது. அதன் இசை, பொருள், பொருளை ஏந்திய வடிவம், அதைப் புலப்படுத்துகின்ற முறை ஆகிய அனைத்திலும் உயர்ந்து தனித்து ஒலிக்கின்றது. உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர் ஒவ்வொருவர் கையிலும் தமிழ்ச்சிட்டு அமர்ந்து கருத்தை விளக்கும் நிலையை உருவாக்கவேண்டும்.

இரா. இளவரசு, எம். ஏ; திருவனந்தபுரம்.

O தாங்கள் தொடங்கியிருக்கும் இப்பணி சீரியது; சிறப்புமிக்கது என்று சொல்லத் தேவையில்லை.

சி. பாலகிருட்டிணன். ஆசிரியர், இராம்பாக்கம்.

O தனித்தமிழ் மானம், தாய்மொழிப்பற்று, உயர்ந்த அறிவு கொண்டு முயற்சியின் பெருமாட்சியை விளக்கி வெளிவந்த தமிழ்ச்சிட்டு மலைமேல் ஏற்றிய நந்தா மணி விளக்கு.

மாறன் வழுதி, பெங்களூர். எ.

O ...சிறுர்களுக்கு மட்டுமின்றி என்போன்ற இளைஞர்கட்கும் தேன் மழை பொழிந்திடும் தமிழ்ச்சிட்டு.......!

க. திருமேனி, தாராபுரம்.

O ...என் போன்ற பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவ உள்ளங்களில் மறைந்து கிடக்கும் திறமையைத் தட்டியெழுப்ப தமிழ்ச்சிட்டு துணை நிற்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கு. தங்கராசு, திருத்துறைப்பூண்டி.

O ...தங்களின் தமிழ்த் தொண்டின் தாளா முயற்சியால் சிறுவரிடத்தும் பெரியவரிடத்தும் தவழுகின்ற தமிழ்ச்சிட்டினை நானும் பயின்று இன்புற்றேன். ......எங்கள் பள்ளி இலக்கிய மன்றத்திற்குத் தென்மொழி; தமிழ்ச்சிட்டு இரண்டினையும் வரவழைத்துத் தமிழ் மறவர்களாக, மாணிக்கங்களாக வாழ விரும்புகின்றோம்

சாமு. திருக்கடவூர்.




## தம்பி!

இரா. இளவரசு.

காற்றினில் உடம்பைத் தவழவிடு!
கதிரவன் ஒளியில் மூழ்கிமகிழ்!
ஆற்றினில் மீன்போல் நீச்சலடி!
அந்தியில் செவ்வான் அழகினைப்பார்!

பறவை விண்ணில் மிதக்கிறதே!
பசும்பயிர் காற்றில் தவழ்கிறதே!
கறவைக் கன்று குதிக்கிறதே!
கவலை உனக்கேன்? மகிழ்ந்தாடு!

அழுக்கை வெளுத்தே உடையணிக!
அளவாய்க் காலம் அறிந்துண்க!
ஒழுக்க நெறியில் நடையிடுக!
உயர்ந்தோர் வாழ்வை அறிந்திடுக!

அரிமா நோக்கு வேண்டுமடா!
அஞ்சாக் களிறாய் நடந்திடடா!
நரிமா நினைவு போக்கிடடா!
நாயென நன்றி காத்திடடா!

மலையெனக் கொள்கை நிலைவேண்டும்;
மண்போல் பொறுமை உளம்வேண்டும்;
அலைகடல் அறிவு நிறைவேண்டும்;
அகில்போல் புகழ்மணம் பெறவேண்டும்!

தென்னை வாழை மாமரம்பார்!
தென்றல் கதிரவன் நிலவினைஓர்!
அன்னை இயற்கை தரும்பாடம்
அறிக; உதவுக; ஏழையர்க்கே!

சாதிப் பிரிவினில் மூட்டுக தீ!
சமயச் சழக்கினை ஒட்டுக நீ!
ஓது தமிழ்உளம் ஏற்றுகவே!
உழைப்பை இறையெனப் போற்றுகவே!

நடந்த கதை!

## கடமை தவறாத காவலர்!

சென்ற மாதத்தில் சென்னையில் தியாகராசன் என்ற இளைஞன் ஒருவன் திருட்டுக் குற்றத்திற்காக இரண்டாண்டுச் சிறைத்தண்டனை பெற்றான். அவன் காவலிலிருந்து தப்பி நோயுற்றிருந்த தன்தாயைப் பார்க்க ஆரணிக்கு வந்தான்.

அவனுடைய தந்தை ஒரு காவலர். அவர் தம் மகன் செய்தது தவறு என்று உணர்ந்தார். மகன்மேல் அன்பு உள்ளவர் ஆனாலும் கடமையை அவர் மறந்துவிடவில்லை. தாம் ஒரு காவலராக இருந்து தம் மகன் செய்யும் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள அவரால் முடியவில்லை.

கடைசியாக அவர் என்ன செய்தார் தெரியுமா? பையனைப் பிடித்துக்கொண்டு சென்னைக்கு வந்து அதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டார். அவர் கடமைதவறாத காவலர்தானே! அவரைப் போல் நாமும் கடமை தவறாமல் இருப்பதுதான் நமக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

**உங்கள் வீட்டில் "தென்மொழி" படிக்கின்றனரா?**
**இல்லையானால் இன்றே வாங்கிப் படித்துப்**
**பயனடையச் சொல்லுங்கள்.**

தென்மொழி, கடலூர்-1.

# காற்று!

காற்றே! உன்னைப் பெற்றது யார்?
காட்டில் மேட்டில் விட்டது யார்?
ஊற்றைப் போலப் பெருக்கெடுத்தே
உலாவப் போகும் கதை என்ன?

தேக்கம் இன்றித் திரிகின்றாய்;
தெரியா தெங்கும் நுழைகின்றாய்;
தூக்கம் என்போல் கொள்வாயோ?
தூங்கா தெங்கும் செல்வாயோ?

குழந்தை கண்ணில் குளிர் செய்வாய்;
குன்றைப் பிய்த்தே தூள் செய்வாய்;
பழங்கள் உலுக்கி உதிர்க்கின்றாய்!
பாட்டியைத் தள்ளிச் சிரிக்கின்றாய்?

முகிலாம் பஞ்சின் மூட்டைகளை
மேலே உருட்டிப் போகின்றாய்!
தவிக்கும் உலக உயிர்களுக்குத்
தண்ணீர் பிழிந்தே தருகின் றாய்!

உலகில் மென்மை நீயேதான்!
உலகில் வன்மை நீயேதான்!
உலகின் மூச்சே! உருவற்ற
உயிரே! காற்றே! பழம் பொருளே!



# இந்த இலக்கியம்

## 2. திருக்குறள்.

நீங்கள் திருக்குறள் பற்றி அறிந்திருப்பீர்கள். இதை இயற்றியவர் திருவள்ளுவர் என்ற புலவர் பெருமான். இந்நூல் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. இதை எழுதிய திருவள்ளுவர் பற்றி வழங்கும் கதைகள் யாவும் கட்டுக்கதைகளே.

திருக்குறள் ஆங்கிலம், இலத்தீன், செருமானியம், பிரஞ்சு, போலிசு, உருசியம், சமசுக்கிருதம், இந்தி, மலையாளம், கன்னடம், உருது, தெலுங்கு, மராட்டி, பர்மியம், கைலித்தியம், சிங்களம், மலாய், சீனம், வங்கம், குசராத்தி, செக், சப்பான், வியந்நாமியம்-முதலிய மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளது.

இதற்குத், தருமர் மணக்குடவர், தாமத்தர், நச்சர், பருதி, திருமலயர், மல்லர், பரிப் பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் முதலிய புலவர்களும் பிறரும் உரையெழுதியுள்ளனர். திருக்குறளைப் பாராட்டி 53 புலவர்கள் பாடிய பாடல்களே ஒரு நூலாக உள்ளது.

இந்நூலை உலக அறிஞர்கள் யாவரும் ஒருமிக்கப் பாராட்டிப் புகழ்கின்றனர். இந்நூலால் தமிழ் மொழிக்கே பெருஞ்சிறப்பு. தமிழர்களாகிய நமக்கும் மிகப்பெருமை.

இந்நூல் 1330 குறள் வெண்பாக்களைக் கொண்டது. 133 அதிகாரங்களைக் கொண்டது. அதிகாரங்கள் அறம், பொருள், இன்பம் என்ற 3 பால்களாகப் பகுக்கப் பெற்றுள்ளன. இதனால் திருக்குறளுக்கு 'முப்பால்' என்ற பெயரும் உண்டு. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு இயல்களாகப் பகுக்கப்பெற்று, 38 அதிகாரங்களையும் 380 குறட்பாக்களையும் கொண்டது.

பொருட்பால், அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று இயல்களாகப் பகுக்கப் பெற்று 70 அதிகாரங்களையும் 700 குறட்பாக்களையும் கொண்டது.

இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என இரண்டு இயல்களாகப் பகுக்கப் பெற்று, 25 அதிகாரங்களையும் 250 குறட்பாக்களையும் கொண்டது.

திருக்குறள் வாழ்க்கை நூல்; அறநூல்; நாம் இவ்வுலகில் பிறந்து எப்படி எப்படி வாழ்தல் வேண்டும் என்று கூறும் நூல். இது போன்ற ஒரு நூல் உலகில் எவ்விடத்தும் எம்மொழியிலும் எவராலும் எழுதப் பெறவில்லை. மொழி, இனம், நாடு, சமயம் இவற்றையெல்லாம் கடந்து உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவான, உயர்வான, தேவையான நூல் திருக்குறள். இந்நூலை நீங்கள் அனைவரும் இப்பொழுதிருந்தே கற்றுவருதல் வேண்டும். இன்றே திருக்குறள் படிக்கத் தொடங்குங்கள்.

---

## இந்திய அஞ்சல் துறை

இப்பொழுது இந்தியா முழுவதிலும் 97 ஆயிரம் அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன.

இதன்படி 6 சிற்றூர்களுக்கு ஒன்றும், இங்குள்ள 4500 பேர்களுக்கு ஒன்றும் என்று கணக்காகின்றது.

ஏறத்தாழ 50 கோடி அஞ்சல் பொருள்கள் மாதந்தோறும் அஞ்சல் வழியே செல்லுகின்றன.

ஏறத்தாழ 37 கோடி உருபாக்களை 75 இலக்கம் பணவிடைகள் வழி மக்கள் மாதந்தோறும் அனுப்புகின்றனர்.

அஞ்சலகங்களில் உள்ள சேமிப்பு வங்கிகளில் உள்ள சேமிப்புப் பணம் ஏறத்தாழ 1400 கோடி உருபா.

ஒவ்வொரு நாளும் 140 ஆயிரம் தொலைவரிகளும் (தந்திகள்) 30ஆயிரம் தொலை பேசிகளும் பதிவாகின்றன.

இந்தியாவிலிருந்து உலகிலுள்ள 59 நாடுகளுடன் தொலைபேசி வழி நாம் தொடர்பு கொள்ள வழியிருக்கின்றது.

# தெரிந்து கொள்ளுங்கள்

O எலும்பு வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது சுண்ணும்புச் சாரமே! இது கேழ்வரகிலும், பயறு வகைகளிலும் மிகுதியாக உள்ளது.

O மாங்காய்களை மிகுதியாகச் சாப்பிட வேண்டா. மாங்காய் அறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்தும். பசியைப்போக்கி மந்தத்தை உண்டாக்கும்; பற்களின் கெட்டித் தன்மையைப்போக்கி அவற்றை ஆடும்படி செய்யும்; சொற்கள் குழறும்; காற்றைப் பெருக்கும்.

O நெஞ்சாங்குலையிலிருந்து உடல் முழுவதிலும் குருதியைப் பாய்ச்சும் குழலுக்கு நாடி என்றும், குருதியை வடிக்கின்ற குழலுக்கு நாளம் என்றும் பெயர்.

O நாம் ஒரு முறை உண்ணும் உணவு முழுவதும் செரிக்க நான்கு மணி நேரம் ஆகும். எனவே நாம் உண்ட உணவு செரிக்கும் முன் இடையில் வேறு எதனையும் உண்ணக் கூடாது. உண்டால் அவ்வுணவு நஞ்சாகி உடலுக்குக் கேடு தரும்.

O துகை என்று எழுதுவதுபிழை. தொகை என்று எழுதுவதுதான் சரி. சிலவு என்றும் எழுதக் கூடாது; செலவு என்றுதான் எழுத வேண்டும்.

O பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை. இப்பொழுதுள்ள சாதிப் பெயர்களெல்லாம் தொழில் அடிப்படையாக வந்தவையே. எல்லாத் தொழில்களையும் எல்லாரும் செய்யலாம். இவற்றில் இழிவு, சிறப்பு என்பதே இல்லை.

O மிகப்பழங் காலத்தில் இப்பொழுதுள்ள பனி மலை (இமயமலை) கடலுக்குள் இருந்தது. இந்துமாக்கடல் (இந்துமகா சமுத்திரம்)பெரிய நிலப்பரப்பாக இருந்தது. அதற்கு இலெமூரியாக்கண்டம் என்று பெயர்.



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

## 2, தமிழில் சமசுக்கிருதம்

சென்ற இதழில் ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசுவது பிழை என்று படித்தீர்கள். இதேபோல் தமிழ்மொழியில் சமசுக்கிருதம் என்ற ஆரிய மொழியையும் கலக்கக்கூடாது.பொருள் விளங்கப் பேசுவது தானே சரியான பேச்சு.

'' புஷ்பத்தைப் பறி '' என்பது நன்றாகப் புரிகிறதா ? ''பூவைப் பறி'' என்பது நன்றாகப் புரிகிறதா ?

'' பக்ஷி 'என்றால் தெளிவாகப் புரிகின்றதா ? ''பறவை '' என்றால் தெளிவாகப் புரிகின்றதா ?

பூ, பறவை, என்ற சொற்கள் தூய தமிழ்ச் சொற்கள்.

புஷ்பம், பக்ஷி என்ற சொற்கள் சமசுக்கிருதச் சொற்கள்.

இவற்றில் உங்களுக்கு எளிதாகப் புரியும் சொற்கள் பூ, பறவை என்ற சொற்கள். இல்லையா? எனவே நீங்கள் புஷ்பம் என்றோ பக்ஷி என்றோ சொல்ல வேண்டியதில்லை.

நாம் பேசுகின்ற தமிழ் மொழியில் இந்த சமசுக்கிருதம் என்ற வடமொழி அல்லது ஆரியமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து பேசியும் எழுதியும் வருகின்றோம் இவை தமிழ்ச்சொற்களைப் போலவே இருக்கும். ஆனால் உங்களுக்குச் சரிவரப் புரியாமல் இருக்கும். அக்ஷம் என்றால் புரிகிறதா ? அஸலம் என்றால் விளங்குகிறதா? அக்ஷம் என்றால் கண். அஸலம் என்றால் மலை. எனவே புரிகின்ற தமிழ்ச் சொற்களையே நீங்கள் எழுதவும் பேசவும் வேண்டும். புரியாத சொற்களை நீங்கள் விலக்கிவிட வேண்டும்.

# இரும்பு.

இரும்பு ஒருவகை மாழை (உலோக)ப் பொருள். ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முன்பே எகுபதியர் இரும்பைப் பற்றி அறிந்திருந்தனர். அவர்கள் இரும்பினால் செய்த நகைகளை அணிந்திருந்தனர். மண்ணிலும், நீரிலும், நிலைத்திணை (தாவரங்)களிலும், உடலிலுள்ள அரத்தத்திலும் இரும்புத்துணுக்குகள் உள்ளன. வட அமெரிக்காவில் மெக்சிகோ நாட்டில் 640 அடி உயரமும் 4 சதுரக்கற்கள் பரப்பும் கொண்ட ஓர் இரும்பு மலை உண்டு.

இரும்பில் கலந்துள்ள கரியின் அளவைப் பொறுத்து அதை வார்ப்பிரும்பு (Cast Iron), எஃகு (Steel), தேனிரும்பு (Wrought Iron) என மூன்று வகையாகப்பிரிக்கலாம். தூய்மையான இரும்பு வெண்மையாகவும் மென்மையாகவும் இருக்கும். இது 1533 பாகைச் (டிகிரி) சூட்டில் உருகும். 2450 பாகைச்சூட்டில் கொதிக்கும்.

இரும்பு மூலப்பொருளுடன் பலவகை உப்புகளைச் சேர்த்துப் பலவகையான இரும்புகளை உண்டாக்குகின்றனர். இவற்றிற்கு இரும்புக்கூட்டுகள் என்று பெயர்.

வார்ப்பிரும்பில் 100க்கு 4 பங்கு கரி உள்ளது. இது கடினமானதன்று; எளிதாக உடையும் தன்மை உடையது. இதைச் சூடேற்றி அடித்து நீட்டவோ தகடுகளாக விரிக்கவோ முடியாது. உருக்கி அச்சுகளில் வார்க்கலாம். அதனாலேயே இதற்கு இப்பெயர் வந்தது.

எஃகு இரும்பில் 100க்கு $1\frac{3}{4}$ பங்கு கரி இருக்கும். கரியல்லாது இதில் மாங்கனீசு, கந்தகம், எரியம், சிலிக்கன் முதலியவற்றையும் கலக்கின்றனர். இதுவே கத்தி, வாள், ஊசி, கடிகாரம் முதலிய உறுதியான கருவிகளும், வேறுசில எந்திரக் கருவிகளும் செய்யப் பயன்படும். இதைக்காய்ச்சித் தட்டலாம். சூடு ஆறியபின் இது மிகவும் கடினமாக இருக்கும்.

தேனிரும்பில் கரி மிகக் குறைவாக 100க்கு 1 பங்கே இருக்கும். இது விரைவில் துருபிடிக்காது. எஃகு இரும்பு கண்டு பிடிக்கப்படும் வரை இதுவே எல்லா வகையிலும் பயனுள்ளதாக இருந்தது.

பழங்காலத்தில் இரும்பு பொன்னின் விலையை விட மிகுதியாக இருந்தது. கிரீசு நாட்டில் கண்டெடுக்கப்பட்ட மோதிரம் ஒன்றில் இரும்பு பதிக்கப்பட்டிருந்தது. அம்மோதிரம் கி.மு 1100 ஆண்டைச் சேர்ந்தது. முற்காலத்தில் இரும்பை உருக்குவது கடினமாக இருந்ததாலேயே அரிதாகப் பயன் படுத்தப் பட்டு வந்தது. இரும்பு உருக்கும் முறை நம் நாட்டினரிடமிருந்தே எகிப்து முதலிய நாடுகளுக்குப் பரவினது.

## எழுதும் முறை

உலகில் பொதுவாக எல்லா நாடுகளிலும் எழுத்தை இடமிருந்து வலமாகத்தான் எழுதுகின்றனர்

ஆனல் சீனர் எழுத்துகளை மேலிருந்து கீழ்நோக்கியே எழுதுகின்றனர். வரிகள் வலப்பக்கமிருந்து இடப்பக்கமாய்ச் செல்லுகின்றன.

சப்பானியரும் சீனர்களைப் போல எழுத்துகளை மேலிருந்து கீழ் நோக்கியே எழுதினலும், வரிகளை இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் நோக்கியே எழுதுகின்றனர்.

மெச்சிகோ நாட்டினரோ கீழிருந்து மேலாக எழுதுகின்றனர்.

துருக்கி, அரேபியா, பெருசியா முதலிய நாட்டினர் தங்கள் மொழிகளை வலமிருந்து இடப்பக்கமாகவே எழுதுகின்றனர். யூதர்களும் தங்கள் ஈபுரு மொழியையும் இப்படித்தான் எழுதி வருகின்றனர்.

## அச்சு எழுத்துகள்

முதன்முதலில் அச்சு எழுத்துகளைக் கண்டு பிடித்தவர் சான் கூட்டன்பர்க்கு என்னும் செருமானியரே ஆவார். இவர் தாம் கண்டு பிடித்த எழுத்துகளைக் கொண்டு முதன் முதலில் அச்சிட்ட நூல் பைபிள் என்னும் கிறித்தவ மறை நூலே. இந்நூல் ஆட்டுத்தோலில் அச்சிடப் பெற்றது. இந்நூலை வெளியிட ஏறத்தாழ 300 ஆடுகள் கொல்லப் பட்டன. இதன் பின் ஆலந்து நாட்டில் சுவல்லி என்னும் இடத்தில் 1430-ஆம் ஆண்டில் இன்னெரு பைபிள் நூல் வெளியிடப் பெற்றது. இது 40 பெரிய அளவு பக்கங்கள் கொண்டது. இதை அச்சிட 3,000 ஆடுகள் கொலை செய்யப் பட்டு அவற்றின் தோல்கள் பயன்படுத்தப் பட்டனவாம்.



# குட்டிக்கதை

அக்பர் என்ற பேரரசர் ஒருநாள் இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரைப் பார்க்க பெரியவர் ஒருவர் வந்தார் அக்பர் இறைவனை நோக்கி "இறைவா! இன்னும் பெரிய அளவில் செல்வமும், நாடும் எனக்கு வந்து சேரும்படி செய்." என்று வேண்டிக் கொண்டிருந்தார். இதைக் கேட்ட பெரியவர் உடனே எழுந்து போக முயன்றார். அக்பர் அவரைத் தடுத்து "திரும்பிப் போக முயற்சி செய்தது ஏன்" என்று கேட்டார்.

அதற்குப் பெரியவர் "அரசே! நான் ஓர் ஏழை! காடுகளில் திரிபவன். நான் சில பொருள்களைத் தங்களிடம் கேட்டு வாங்கிக் கொண்டு போகலாம் என்று நினைத்து வந்தேன். ஆனால் தாங்களோ, என்னைவிட ஏழையாக இருக்கின்றீர்கள். கடவுளிடம் பொருள் கேட்டுக் கெஞ்சுகின்றீர்கள்! ஓர் ஏழையிடம் ஓர் ஏழை இரந்து பொருள் பெறுவது நல்லதில்லை. எனவே புறப்பட்டு விட்டேன்" என்றார்.

அதற்கு அக்பர், தமக்குள்ள பொருள் ஆவலைக் கண்டு வெட்கம் அடைந்தார்.

---

## கொசு கடிக்காமலிருக்க மாத்திரைகள்

நம்மில் எல்லாரையும் கொசுக்கள் கடிப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். அதுதான் இல்லை. நம்மில் சிலரைக்கொசுக்கள் கடிப்பதே இல்லை. காரணம் அவர்களின் உடலிலிருந்து வீசும் ஒரு வகை நாற்றமே! அப்படிப்பட்டவர்களை நெருங்கவே கொசுக்கள் அஞ்சுகின்றன.

கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த மருத்துவர் ஆவார்டு மைபாசு. இவர் 1000 பேர்களைக் கொண்டு ஓர் ஆராய்ச்சி நடத்தினார். இவர்களில் சிலரைக் கொசு கடிப்பதில்லையாம். எனவே அவர்களின் உடல்களிலிருந்து கசியும் வெயர்வை, அவர்களின் தோல் இவற்றைப்பற்றி ஆய்ந்தார். அவற்றில் கலந்துள்ள வேதியல் பொருள்களைக் கொண்டு ஒருவகை மாத்திரைகளை இவர் கண்டுபிடித்துள்ளார். அவற்றைப் பிறரும் உட்கொண்டால், அவர்கள் உடல்களிலும் அந்நாற்றம் வீசுகின்றதாம். இதனால் அவர்களையும் கொசுக்கள் கடிப்பதில்லையாம்.




சென்ற மாதப் புதிர்க்கணக்கில் ஓர் அச்சுப்பிழை நேர்ந்துவிட்டது. அதனால் எல்லாரும் அதற்கு எளிதில் விடை கண்டு பிடித்திருப்பீர்கள். இருந்தாலும் விடை தெரிய வேண்டாமா? சொல்லி விடுகின்றோம். படகில் வந்தவர்கள் மொத்தம் 40 பேர். என்ன? விடை சரியாக வருகிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள். இதோ இன்னொரு புதிர்!

திருடர்கள் சிலர் ஒரு நாள் ஓர் ஊரில் புகுந்து அங்குள்ள செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்தனர். அப்படி அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும்போதே, அவ்வூரில் உள்ள காவலர்கள் அவர்களைப் பிடிக்க முயற்சி செய்தனர். ஆனால் திருடர்களோ காவலர் கைகளுக்குக் கிடைக்காமல் ஓட்டமெடுத்தனர். காவலர்களும் அவர்களை விடாமல் துரத்திச் சென்றனர்.

திருடர்களோ அவ்வூர் கடற்கரைப் பக்கமாக ஓடி, அங்கு நிறுத்தி வைக்கப் பெற்ற படகு ஒன்றில் ஏறி, அதை விரைவாகக் கடலில் செலுத்தினர். காவலர்களும் அங்கு இருந்த மின்சாரப் படகில் ஏறி அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

திருடர்கள் செல்லும் படகோ ஒரு மணிக்கு 5 கல் விரைவில் செல்கின்றது. காவலர்கள் செல்லும் படகோ முதல் மணியில் ஒரு கல்லும் 2- ஆவது மணியில் 2 கல்லும், 3-ஆவது மணியில் 3 கல்லுமாக ஒரு மணிக்கு ஒரு கல் மிகுதியான விரைவுடன் போகின்றது. இப்படியே அவர்கள் சென்றால் காவலர்கள் திருடர்களைப் பிடிக்க எத்தனை மணி நேரம் ஆகும்? விடை அடுத்த மாத இதழில் வரும்.

---

## குழந்தைகளே!

'தமிழ்ச்சிட்டு' உங்கள் இதழ். நீங்கள் அறிவு, கலை, மக்கள் பற்றி பாட்டு, கதை, கட்டுரை, துணுக்குகள், புதிர்கள், விடுகதை, வேடிக்கை முதலியவற்றை எழுதியனுப்புங்கள். அடுத்த இதழில் வெளிவரும் "எங்கள் விருப்பம் என்ன" என்னும் பகுதிக்கும் எழுதுங்கள். எழுதியனுப்புபவை உங்கள் சொந்தக் கருத்துகளாக மட்டும் இருக்கவேண்டும்.

—அமைச்சர்.

# மாணவர்க்கான மணிமொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே;

- உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது! அதனை மலரச் செய்வதே வாழ்க்கை என அறிந்து கொள்ளுங்கள்.
- ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் தவறாமல் கடைப்பிடியுங்கள்.
- நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித் தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள் ளுங்கள்.
- பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர் களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய் யுங்கள்.
- நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப் படங்களில் வீணாக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள் ளாதீர்கள்.
- எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.
- பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.
- உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.
- சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதி லும் இன்பம் காணுங்கள்.
- இறுதியாக, உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயக மாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.